**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>அ.வ.எண்.215/2023</u>**

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 27–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்.** | : **நகுல்சாமி** | | **தொழில்** | : |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : |
| **முகவரி** | : | | **மதம்** | : |
| **ஜாதி** | : | | **வயது** | : |

**<u>முதல் விசாரணை</u>:–**

நான் இவ்வழக்கில் 1 ஆம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 20.10.2023 ஆம் தேதிய தாவா 1வது அயிட்ட சொத்திற்கான 1வது பிரதிவாதி பெயரில் உள்ள கணிணி பட்டாவின் பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 19.11.2025 ஆம் தேதிய 1வது பிரதிவாதியின் பெயரில் உள்ள கிஸ்து ரசீதின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 14.12.2023 ஆம் தேதிய 1வது பிரதிவாதி திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு

வங்கியில் விவசாய கடன் வாங்கியதற்கான ரசீதின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 05.12.2024 ஆம் தேதிய 1வது பிரதிவாதி R.1562 தாந்தோணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நகை கடன் பெற்றதற்காக ரசீதுகள் (எண்ணிக்கை 5) பி.வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 24.02.2021 ஆம் தேதிய R.1562 தாந்தோணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் விவசாய பயிர் கடனை தள்ளுபடி செய்ததற்கான சான்றிதழின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 16.12.2003 ஆம் தேதிய விவசாயத்திற்கான நீர் பாசனத்திற்காக பைப் அமைப்பதற்கு பொருட்கள் வாங்கியதற்கான ரசீதின் உண்மை நகல் பி.வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.27 19:23:12 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.